ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவ ஹூ புரட்டாசி மீ பகுதி ௯.
Vol 4. September & October 1927. No. 9.

ஸித்தோபாயம்.

ஸாத்யோபாயம், ஸித்தோபாயம் என்ற இவ்விரண்டும் மோக்ஷ ஸாதனங்களாகுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள் ஸாத்யோபாயத்தை ஸ்வப்ரயத்னத்தாலே கார்யஸித்தியுண்டென்றிருப்பாரை நோக்கி வேதபுருஷன் விதித்தான். ஸித்தோபாயத்தை ஸர்வேச்வரன் தானே விதித்தான். ஸாத்யோபாயத்தையும் கீதையில் கண்ணபிரான் விதித்துள்ளானே யெனின்; அர்ச்சுனன் நெஞ்சைப் பரிசோதிப்பதற்கு வேதபுருஷனால் விதிக்கப்பெற்ற ஸாத்யோபாயத்தை அநுவதித்துரைத்தானேயன்றிப் பிறிதில்லை. தான் முக்ய நோக்கத்தோடு விதித்தது ஸித்தோபாயமேயாம். அது பற்றி இங்கு ஸித்தோபாயத்தை ஸர்வேச்வரன் விதித்தானென்றுரைக்கப்பட்டது.

இங்கு ஸித்தோபாயத்தின் இயல்பை நன்கு புலப்படுத்துவதற்காக முன்னர் ஸாத்யோபாயம் ப்ரஸ்தாபிக்கப்படுகிறது. ஸாத்யோபாயமாவது.— சேதனன் முயற்சியால் ஸாதிக்கப்படுகிற உபாயமாம். [உபாயம் - இஷ்டஸித்தியையும் அநிஷ்டநிவர்த்தியையும் செய்யுமது.] அது, கர்மஜ்ஞாநபக்திகளென்று மூன்று வகைப்படும். இவை சேதனன் முயற்சியால் ஸாதிக்கப்படுமவை எனவே இவை ஆக்கப்பாடுடையனவென்றறியத்தக்கது. ஸத்கர்மாநுஷ்டானத்தால் சித்தசுத்தியுண்டாக அதனால் ஜ்ஞாநமும், ஜ்ஞானத்தால் பக்தியுமுண்டாகும். இவை ஒன்றற்கொன்று காரணகாரியமுடையனவாயிருக்கும். யாககர்ம முதலியவை சேதனன் முயன்று செய்யாவிடத்து

அவை தாமே உண்டாகமாட்டா. மேலும் இவை கிரியாரூபமாகிய அசேதனங்களாயிருக்கின்றமையால் சேதனனுக்குச் செய்யவேண்டு மவற்றை யறிகைக்கும் அறிந்தபடி செய்துமுடிக்கைக்கும் இவற் றிற்கு ஆற்றலுமில்லை. இங்ஙனமிருக்குமேல் இவற்றிற்கு உபாயத்வ முண்டென்பது எவ்வாறு பொருந்துமெனின்; இவை தேவதையை அநுக்ரஹிக்கும்படி தூண்டுகின்றதினால் அத்தேவதை அநுக்ர ஹத்தைச்செய்கிறது. ஆக உபாயத்வம் தேவதையிடத்தும், கர்ம ஜ்ஞாந பக்திகளிடத்தில் உபாயத்வத்தைச் செய்விக்கின்ற வியல்பும் கிடக்கின்றன. இவ்வொற்றுமைநயம்பற்றிக் கர்மஜ்ஞாநபக்திகள் உபாயங்களாமென்றுரைக்கப்பட்டன. இது நிற்க;

ஸித்தோபாயமாவது:— பண்டேயமைந்துகிடக்கின்ற உபாய மாம். அஃதாவது:— ஆக்கப்படாததாய் நித்யமாயுள்ள உபாயமாம். எனவே பரமசேதனனாகிய உபாயமென்பது பெறப்படும். லோக தேசிகனும் ஸித்தோபாயத்தின் பொருள்நிர்ணயமுரைக்கவந்தவிடத் தில் "(1) ஸித்தமாய், (2) பரமசேதனமாய், (3) ஸர்வசக்தியாய், (4) நிரபாயமாய், (5) ப்ராப்தமாய், (6) ஸஹாயாந்தர நிரபேக்ஷமா யிருக்கை." என்று அருளிச்செய்தார்.

---

(1) ஸித்தமாவது:— ஆக்கப்படாததாய், பழமையான தர்மமாயிருப்ப தாம்.

(2) பரமசேதனம்:— எல்லாவற்றையும் நன்கறிகிற ஸர்வேசுவரன்.

(3) ஸர்வசக்தியாவது:— எல்லாவாற்றலு முடைத்தாயிருப்பதாம்.

(4) நிரபாயம்:— அபாயமில்லாதது; அஃதாவது:— சேதன் முயற்சி யால் ஸாதிக்கக்கூடிய வற்றிற்கு இடையிலே அபாயமுண்டாயினும் உண்டா கும். இது, ஸித்தவஸ்துவாதலால் அபாயமில்லாததாயிருக்கு மென்றறியத் தக்கது.

(5) ப்ராப்தம்:—சேதன ஸ்வரூபத்திற்கிசைந்தது. அஃதாவது:— தன் நன்மையைக்குறித்துத் தனக்கோர் பிரவர்த்தியின்றி எம்பெருமான் கை பார்த்துக்கொண்டிருக்கிற ஆத்மாவின் பாரதந்தர்ய ஸ்வரூபத்திற்குப் பொருந் தியதாயிருப்பதாம்.

(6) ஸஹாயாந்தர நிரபேக்ஷம்:— பிறிதோர்துணையை விரும்பாதிருத் தல். ஸர்வேசுவரன் எல்லாவற்றையும் அறியுந்திறனும், ஆற்றலுமுடைய

இதனுலும் ஸித்தோபாயம் என்பது ஸர்வேசுவரனுகிய உபர்யமா மென்பது பெறப்படும்.

ஸம்ஸார தாபாக்னியினின்றும் நீங்கி நித்யாநந்த வாழ்வைப் பெறக் கருதுகின்றவர்களும், எல்லாமறிந்த ஜ்ஞாநிகளும் ஸர்வேசுவரனை யடைதலாகிய பலனையே விரும்புகின்றார்கள். எம்பெருமானும் அவர்கள் விரும்பியபடி தன்னை அநுபவிக்கும்படி அநுக்ரஹிக்கிறான். ஆக ஸர்வேசுவரனிடத்தில் பலரூபத்வ தர்மமே கிடக்கின்றது. அங்ஙனமிருக்க இவ்விடத்தில் உபாயத்வ தர்மமும் அவனிடத்திலுள்ளதாக உரைப்பது எங்ஙனம பொருந்தும்? நதியைத்

வனுயிருக்கின்றானதலால் அவன் பிறிதோர் ஸஹாயத்தை விரும்பாதிருப்பான்.

இனி, ஸாத்யோபாயம் இதற்கெதிர்த்தட்டாயிருக்குமென்பதும் இங்குரைக்கப்பெறும். அது வருமாறு:— இது, ஸாத்தியமாய், அசேதனமாய், அசக்தியாய், அபாயமாய், அப்ராப்தமாய், ஸஹாயாந்தரத்தை யபேக்ஷிப்பதாயிருக்கும். இவற்றுள் ஸாத்யமாவது:— சேதனன் முயற்சியால் ஸாதிக்கப் படுவதாம். அசேதனமாவது:— அறிவற்றதாம். சேதனனல் ஸாதிக்கப் படுகிற கர்ம முதலியன கிரியாரூபங்களாதலால் அவை ஒன்றைத் தாமே யறிகைக்கு முடியாதனவாயிருக்கும். அதனல் இங்கு இவை அசேதனங்களாமென்றுரைக்கப்பட்டன. அசக்தியாவது:— பலத்தைக் கொடுப்பதற்கு ஆற்றலில்லாதிருப்பதாம். யாக முதலிய கிரியைகளைச் செய்யுமிடத்துக் கிரியாலோபம் மந்த்ரலோபங்களுண்டாகுமேல் அக்கிரியைகள் அபாயமுடையனவாயொழிவதோடு அவற்றை மேற்கொண்டவர்களையும் அபாயத்திற்குள்ளாக்கும். இதுவிஷயம் கைசிகவிருத்தாந்தத்தில் பிர்ம்மராக்ஷஸன் நம்பாடுவாரை நோக்கி 'நான் முற்பிறப்பில் ஒரு பிராம்மணனுகவிருந்து யாகஞ்செய்யத் தொடங்கினேன்; அதில் கிரியாலோபம் முதலியன உண்டாயினமையால் இந்த ஜன்மத்தையடைந்தேன்.' என்றுரைத்ததாலறியலாம். அப்ராப்தமாவது:— சேதனஸ்வரூபத்திற்கு விரோதமாயிருப்பதாம். தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தனக்கோர் பற்றின்றி அசித்துப்போல் பாரதந்த்ரனுயிருக்கத்தக்க ஆத்மஸ்வரூபத்திற்கு ஸ்வயத்னத்தாலே கார்யஞ்செய்யத் தொடங்குதல் விரோதமாதலால் கர்மஜ்ஞாநாதிகள் அப்ராப்தங்களாகும். மேலும் கர்மஜ்ஞாநாதிகள் தம் உற்பத்திகாலத்தில் சேதனனை சகாயமாக விரும்பிப் பலவேளையில் ஈசுவரனை எதிர்பார்த்துக் கொண்டிருக்குமாதலால் இவை ஸஹாயாந்தரங்களை யபேக்ஷிக்குமவையாயிருக்குமென்றுரைக்கப்பட்டது.

தாண்டிச்செல்லும் பலத்தில் விருப்பமுடையவன் ஓடமாகிய ஸாத னத்தைக்கொண்டு தாண்டிச்செல்கிறுன். இங்கு நதியைத்தாண்டிச் சென்றவனுக்கு இஷ்டஸித்தியை ஓடம் தந்ததினுல் ஓடம் உபாய மும், நதிக்கரை உபேயமுமாயின. ஆக உபாயத்வ உபேயத்வ மென்ற இரண்டு தர்மங்களும் ஒரதிகரணத்திலின்றி வெவ்வே றிடத்தைப்பற்றிக் கிடக்கின்றமையறியலாம். மேலும், ஸ்ரீவசன பூஷணத்தில் "உபாயக்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக்கொள்கை யாலே" என்று அருளிச் செய்யப்பட்டுளது. ஏறிட்டுக்கொள்வ தென்பது தனக்குரிமையில்லாத பிறிதொன்றன் தொழிலைத் தானநுஷ்டிப்பதாகுமன்றே! ஆதலால் இங்கு உபாய க்ருத்யத்தைத் தான் ஏறிட்டுக்கொண்டான் எனவே ஈசுவரனுக்கு உபாயத்வம் இயல்பாகவில்லையென்பது தோற்றும். இஃதொருபுறமிருக்க;

சரமசுலோகத்தில் கண்ணபிரான் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ" "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சர ணம்வ்ரஜ" எல்லாத்தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று என்று அருளிச்செய்தான். "த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:, ஶரணாகதி:" "த்வமே வோபாய பூதோ மே பவ்வதி ப்ரார்த்தநாமதி:, சரணுகதி:" நீயே எனக்கு உபாயமாக வேணுமென்கிற ப்ரார்த்தனுரூபமான புத்தி

இன்னும் "ஃபலமத உபபத்தே:" "பலதம உபபத்தே:" என்ற ஸூத்ரத்தில் ஸ்வர்க்காதிபலனைக்குறித்தும், மோக்ஷத்தைக்குறித்தும், கர்ம ஜ்ஞாந பக்திகள் ஸாதனங்களாகுமென்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள் ளவே இந்தக் கர்மம் முதலியவைகளே ஸ்வர்க்க மோக்ஷபலங்களைக் கொடுக் கின்றனவா அல்லது கர்மத்தால் ஆராதிக்கப்படுகிற பரமபுருஷன் மோக்ஷத் தைக்கொடுக்கின்றுனு என்று ஆராய்ச்சிசெய்து பலத்தைக் கொடுக்கின்ற வன் ஸர்வேசுவரனே என்று தீர்மானிக்கப்பட்டுளது. இதனுல் ஸாத்யோ பாயத்தின் சிறப்பின்மையும், ஸித்தோபாயத்தின் சீர்மையும் நன்கறியலாம். இச்சூத்திரத்தின் பொருளாவது:— பலம் இஷ்டப்ராப்திரூபமாயும், அநிஷ்ட நிவர்த்திரூபமாயுமிருந்துள்ள பலமானது, அத:— ஸர்வேசுவரனுலே ஸித்திக் கும். (ஏனென்றுல்) உபபத்தே:— இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிகாரமாகிற பலத்தையறிந்து கொடுக்கைக்குத் தகுதியான ஜ்ஞாந சக்திகளிரண்டும் பூரணமாயிருக்கையாலே என்பதாம்.

விசேஷமே சரணாகதியென்று சொல்லப்பட்டது. இன்னும் இவை போன்ற பலவிடங்களிலும் ஸர்வேசுவரனே உபாயமாவானென்று உரைக்கப்பட்டுளது. மேலும் உபாயத்வ உபேயத்வமென்ற இரண்டு தர்மங்கள் ஸமாநாதிகரணத்தில் இருக்கலாகாதென்ற நிர்ப்பந்தமில்லை. "புல்லைக்காட்டிப் புல்லையிடுவாரைப்போல" என்ற வாக்யத்தை ஆராய்வோமாகில் தன்னிடத்தில் பசு வருவதற்குப் புல் உபாயமாயிருந்து பின் அப்புல்லே அதற்கு உணவுப்பொருளாகின்றதினால் புல்லில் உபாயத்வம் உபேயத்வம் என்ற இரண்டு தர்மங்களும் கிடக்கின்றமையறியலாம். அதுபோல ஸர்வேசுவரனிடத்தில் இவ்விரண்டும் கிடக்கின்றனவென்றால் யாதொரு தோஷமுமில்லை.

அர்ஜுனன் முன்பே கண்ணபிரானைநோக்கி 'உன்னையே உபாயமாக வடைகிறேன்' என்று பிரார்த்தித்தபின் அவனுடைய கார்யஞ் செய்யவேண்டிய முறையிருக்க அங்ஙனஞ்செய்யாமல் கண்ணபிரான் 'நாமே இவனுக்கு உபாயமாய்நின்று அநிஷ்டநிவர்த்தி முதலியவைகளைச் செய்யக்கடவோம்' என்று தானே ஏறிட்டுக்கொண்டு "ஶரெகெஂ ஶரணஂ வ்ரஜ... ஸூவாவெஹ்யொ மொக்ஷயிஷ்யாமி" "மாமேகம் சரணம் வ்ரஜ... ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அருளிச்செய்தான்; என்ற இம்முறைபற்றி "உபாயக்ருத்யத்தையும் தானே யேறிட்டுக்கொள்கையாலும்" என்றுரைக்கப்பட்டதேயன்றி வேறில்லை. ஆகையால் உபாயத்வ தர்மமும் ஸர்வேசுவரனுக்கு இயல்பாகவே உள்ளதென்றறியத்தக்கது.

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டரும் "உவாயொவெயவெுதஹிஹ தவ தகூஂ நது஗ுணௌ" "உபாயோபேயத்வேதஹிஹ தவ தத்வம் நதுகுணௌ" உபாயோபேயத்வங்களிரண்டும் தேவரீருக்கு (எம்பெருமானுக்கு) ஸ்வரூபம். இவை வந்தேறியான குணங்களில்லை என்று அருளிச்செய்தார். இந்த உபாயோபேயத்வங்களிரண்டும் ஸர்வேசுவரனுக்குள்ள * உபயலிங்கத்தி

* உபயலிங்கம்—ஸர்வேசுவரனுக்குள்ள ஹேயப்ரத்யநீகத்வம், ஸமஸ்த கல்யாணகுணாத்மகத்வம் என்ற இரண்டு லக்ஷணங்கள். ஸர்வேசுவரன் சேதனாசேதனங்களோடு பிரிக்கவொண்ணாத ஸம்பந்தத்தையுடையவனாயிருக்கச்செய்தேயும் அந்தச் சேதனாசேதன சரீரங்களிலுள்ள கர்மத்தா

லடங்குமாதலால் இவை ஸ்வதஸித்தமென்று கொள்ளத்தக்கது. ஸ்வஸித்தமாவது:— ஸ்வரூபத்தில் நித்யநியததர்மமாயிருப்பதாம்.

மேலும், "சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானல் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்றும், * "கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை" என்றும் ஆழ்வாரருளிச் செய்ததினலும் உபாயோபேயத்வங்கள் எம்பெருமானிடத்துள்ளன வென்றறியலாகும்.

கண்ணபிரான் ஸித்தோபாயத்தை விதித்தபோது அர்ஜுனனை நோக்கி "𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜, 𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃" ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாசுச:" எல்லாத்தர்மங்களையும் நன்ருக விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று; நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; என்று அருளிச் செய்தான். இதில் 'ஏகம்' என்றசொல் 'த்வமேவசரணம் ப்ராப்ய' 'மாமேவயே ப்ரபத்யந்தே' 'த்வமேவசரணம்கச்ச' என்ற விடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளனபோல ஏகாரார்த்தமாகக்கொள்ள

லுண்டான ஹேயங்கள் அவனுக்கு வருவதில்லையென்று சுருதி இவ்விரண்டு லக்ஷணங்கள் அவனுக்குண்டென்று சொல்லியது. ஹேயப்ரத்யநீகத்வமாவது:— அற்பகுணங்களில்லாதிருத்தலாம். கல்யாணகுணைத்மகத்வமாவது:— அநுகூலமாயிருத்தலாம். உபாயத்வம் ஹேயப்ரத்ய நீகத்வத்திலும் உபேயத்வம் கல்யாணகுணைத்மகத்வத்திலும் அடங்கும்.

* இதற்கு நம்பிள்ளை யருளிச்செய்த வ்யாக்யானமும் இங்கறியத்தக்கது. அதுவருமாறு:— 'கருமமித்யாதி' புண்யபாபரூபமான கர்மங்களுக்கும், கர்மபலங்களுக்கும் நியாமகனுய். கர்மங்களுண்டானலும் கர்மாநுஷ்டாதாவாயிருப்பாெனருவன் வேணுமே, கர்மாநுஷ்டாதாவுமாய், அநுஷ்டாத்ருத்வாரா கர்மநிர்வாஹகனென்றபடி. 'கருமபலனுமாகிய' கர்மங்களையநுஷ்டித்தாலும் அவற்றுக்கொருவன் பலப்ரதானம் பண்ணுதபோது அவை பழுதையோபாதியாய்க் கிடக்குமிறே. அவை யசேதனக்ரியையாகையாலே; அவற்றுக்கும் பலப்ரதாதாவுமாய், 'காரணன்றன்னை' புண்ணியங்களிலே ப்ரவர்த்திப்பிக்கவும் பாபங்களைப்போக்கவும், அவற்றுக்குப் பலங்கொடுக்கவும் ஒரு கர்த்தாவேணும், அவற்றுக்குக் காரணபூதனுயுமுள்ளவனை" என்பதாம்.

வேண்டும். கொள்ளவே 'இவனே கள்வன்' என்பது பிறன் கள்வனில்லை என்று பிரித்து வாங்கியதுபோல இந்த ஏகாரமும் பிரித்துணர்த்தவேண்டும். மேலே, 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்று கர்மஜ்ஞாநபக்தியோகம் முதலிய ஸாதனாந்தர த்யாகம் (விடுதல்) பெறப்பட்டதினால் இந்த ஏகசப்தம் ஸாதனாந்தரத்தைக் கழிக்கிறதென்று சொல்லவொண்ணாது. இந்தச் சரமச்லோகத்தை அருளிச்செய்வதற்குமுன் "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய" "மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்சய" என்னைக்காட்டிலும் சிறப்புடைப் பொருள் பிறிதொன்றுமில்லை என்று தேவதாந்தர தியாகத்தை அருளிச்செய்துள்ளானாதலால் இது, தேவதாந்தரத்தைக் கழிக்கிறதென்று சொல்லுவதற்கு மிடமில்லை. பின்னை இது 'வ்ரஜ்' (பற்று) என்கிற ஸ்வீகாரத்தின் அங்கபாவத்தைத் தவிர்க்கிறதென்று கொள்ளவேண்டும்.

'ப்ரஸக்தஸ்ய ப்ரதிஷேத:' என்ற நியாயப்படி இந்த ஸ்வீகாரத்திற்கு எவ்வகையானும் அங்கத்வமிருந்தாலன்றோ அதை எடுத்துக்கழிக்க வேண்டுமெனின்; இந்த ஸ்வீகாரத்திற்கு அங்கத்வங் கொள்ளுதற்கு இடமுண்டு. எவ்வாறெனின்; "யதநந்தரம் யத்பவதி தத்தஸ்ய காரணம்," "யதநந்தரம் யத்பவதி தத்தஸ்ய காரணம்" யாதொன்றுண்டான பின்பு யாதொன்றுண்டாம் அதற்கு முன்னுள்ளது காரணமாகக்கடவது என்கிற நியாயத்தால் ஸ்வீகாரமில்லாமல் அவன் கைக்கொள்வதில்லை யாதலால் ஸ்வீகாரத்தில் அங்கபுத்தி பிறக்கைக்கு யோக்யதை யுண்டு. மேலும், இந்த ஸ்வீகாரமுண்டானால் மோக்ஷமுண்டு; இஃதில்லாவிடில் மோக்ஷமில்லை; என்ற அந்வயவ்யதிரேக வியாப்தியாலும் இதற்கு அங்கத்வமுண்டென்பது தோற்றும். அங்ஙனமாகில் இதற்கு அங்கத்வமில்லை என்பது எவ்வாறெனின்; அங்கமாவது:— அங்கிக்கு உபகாரத்தைச் செய்வதாம். அஃதாவது:— அங்கியையுண்டாக்கி அது விர்த்தியும் பலனுமடையும்படி செய்வதாம். அதுபோல இந்த ஸ்வீகாரத்தை அங்கமாக்கொண்டால் அது அங்கியாகிய பரம்பொருளையுண்டாக்கி அது விர்த்தியும் பலனுமடையும்படி செய்கிறதெனல் வேண்டும். அங்ஙனஞ்செய்கிறதில்லை என்பது தெளிவாம்.

எவ்வாறெனின்; இந்த ஸித்தவஸ்துவாகிய பரம்பொருள் நித்யமாதலால் அதை இந்த ஸ்வீகாரம் உண்டுபண்ணுகிறதென்று சொல்லவொண்ணாது; அவன் ஏகரூபமாயிருக்கின்றானாதலால் இது அவனை விர்த்திசெய்கிறதென்றுஞ் சொல்லலாகாது. மேலும் அவன் எல்லாமறியுமாற்றலுடைய பரமசேதனனாதலால் பலத்தைக்கொடுப்பதில் பிறிதொன்றை யபேக்ஷிப்பதில்லை. ஆதலால் இந்த ஸ்வீகாரம் அங்கமாகமட்டாதென்றறியத்தக்கது. அப்படியானால் இந்த ஸ்வீகாரத்தை யாதாகக் கொள்வதெனின்; ஸோமக்கிரயத்துக் குறிப்பான பசு, சிவந்தநிறமும் பொன்னிறக்கண்ணும் ஒரு வயதுள்ளதுமாயிருத்தல் வேண்டுமென்பதில் சிவந்த நிறமுதலிய விசேஷணங்கள் மற்றப் பசுவை வேறுபடுத்துணர்த்தியனபோல இந்த ஸ்வீகாரம் அதிகாரிக்கு வியாவர்த்தகவிசேஷணமாகவிருக்கும். இந்த ஸ்வீகாரமுடையோன் ஸாதனாந்தர நிஷ்டன், கைவல்யார்த்தி என்ற இவர் முதலானார்களைக்காட்டிலும் விலக்ஷணனாவானென்பதை இந்த ஸ்வீகாரமுணர்த்துகின்றதினால் இது, அதிகாரிக்கு வியாவர்த்தகவிசேஷணமாயிற்று.

இதைக்குறித்து லோகதேசிகனும் "கீழ்த்தானும் பிறருமான நிலையைக்குலைத்தான்; இங்குத் தானும் அவனுமான நிலையைக் குலைக்கிறான்" என்று அருளிச்செய்தார். அஃதாவது:— 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்கிறவிடத்தில் கர்மஜ்ஞாநபக்தி முதலிய உபாயங்களைவிடச் சொல்லுகையாலே பலத்தைக்கொடுக்கிறதானும் உபாயாந்தரங்களுமாய் அங்காங்கிபாவத்தாலே கூடிநிற்கிற நிலையைக் குலைத்தான். 'ஏகம்' என்கிறவிடத்தில் ஸ்வீகாரத்தில் அங்கத்வபுத்தியைக் கழிக்கிறதினால் தானும் (கண்ணபிரானும்) தன் ஸ்வீகாரத்தில் உபாயபுத்தி பண்ணிநிற்கின்ற இவனுமான (அர்ஜுனனான) நிலையைக் குலைக்கிறானென்பதாம். இங்கு உபாயாந்தரங்களைப் 'பிறர்' என்றது "உன்னாலல்லால் பாவராலு மொன்றுங் குறைவேண்டேன்" என்பதுபோலாம்.

இதனால் ஸித்தோபாயத்திற்கு ஸ்வீகார அங்கத்வமில்லை என்றதனால் ஸித்தோபாயம் நிரபேக்ஷோபாயமாயிருக்குமென்பது தெளிவாயிற்று.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

ஆநந்தமயன்.

ஆநந்தமயன்:— ஆநந்தகுணமிகுதியுமுடைய ஸர்வேசுவரன். மயட் என்ற ப்ரத்யயம் (விகுதி) மிகுதிப்பொருளைக்குறிக்கும். இந்த மயட் என்ற விகுதி மிகுதிப்பொருளையுணர்த்துமாகில் ஸர்வேசுவரனைக் குறிப்பிடாதென்று அத்வைதிகள் கூறுகிறார்கள். எவ்வாறெனின்; இந்த மயட் விகுதி மிகுதிப்பொருளைத்தருமாயின் அதிகமான ஆநந்தமும் அல்பம் துக்கமுமுடையவனென்று தோற்றும். தோற்றவே இப்பதம் துக்கலேசமுமற்ற பரம்பொருளை உணர்த்தாது; அற்பசுகமும் மிகுந்த துக்கமுமுடைய ஜீவனையுமறிவிக்காது; ஆதலால் இந்த மயட் விகுதிக்கு விகாரப்பொருள்கொள்ளவேண்டும். அப்பொழுது இப்பதம் ஆநந்தரூபியான பிர்ம்மத்தினுடைய விகாரமான ஜீவனைக்குறிப்பிடுமென்றார்கள். பரப்பிர்ம்மம் சுத்தமான ஆநந்தஸ்வரூபமென்றும், அதினுடைய அவித்யையென்னும் அஜ்ஞாநத்தினல் தன் ஸ்வரூபம் மறைப்புண்டிருக்கையாகிற விகாரத்தையடைந்திருக்கிற அம்சங்கள் ஜீவர்களாமென்றுங்கொள்வது அவர்களுடைய மதமாம். அதற்கேற்ப இங்கு மயட் என்ற விகுதிக்கு விகாரப்பொருள் கூறினார்கள். இதுநிற்க;

இந்த மயட் என்ற விகுதிக்கு மிகுதிப்பொருள்கொள்வதால் அவர்கள் சொல்கிறபடி குற்றம்வருகிறதில்லை. எவ்வாறெனின்; ஸர்வேசுவரனுக்கு அதிகமான ஆநந்தமுண்டு என்றால் மற்றவனுக்கு இவ்வளவு ஆநந்தமில்லை; இதைக்காட்டிலும் குறைந்திருக்குமென்று தோற்றுமே யல்லது ஸர்வேசுவரனுக்கு ஆநந்தத்திற் கெதிர்த்தட்டான துக்கம் சிறிதுண்டென்று தோற்றாது. கிருஷ்ணன் என்னும் பெயருடையான் மிக்க அழகுடையவனாயிருக்கிறானென்றால் அவனுக்குச் சிறிது அழகின்மையுமுண்டென்று பொருள்கொள்வதெப்படி? மேலும் சிறந்த ஜ்ஞாநவாந் என்று கொண்டாடப்படுகிற ஒருவனுக்கு ஒருசமயத்தில் சிறிது அஜ்ஞாநம் தோற்றினாலும் அது

பிரமாணாந்தரங்களாற் பெறப்படுமேயல்லாது சிறந்த ஜ்ஞாநவர்ந் என்னும் அப்பதமே அப்பொருளைக்காட்டாது. அதுபோல இங்கு ஸர்வேசுவரனுக்கு அற்பதுக்கமுண்டென்கிற பிரமாணமில்லாமை யாலும், இஃதன்றி, "ஊவஹதவாஜா" "அபஹதபாப்மா" (பாபமில்லாதவன்) இது முதலான வாக்யங்களில் அவனுக்குத் துக்கலேசமுமில்லை என்று சொல்லுகையாலும் அவனுக்கு அற்பம் துக்கமுண்டென்று கொள்ளுதற்கு இடமில்லை. மேலும் இந்த மயட் விகுதி விகாரார்த்தமாய் இப்பதம் ஜீவனையுணர்த்துமேல் விகாரம் அநித்யத்வ ஸாதகமாய் ஜீவனை நித்யமென்று சொல்லுகிற சுருதி வாக்யங்களோடு விரோதிக்கும். ஆதலால் மயட் விகுதிக்கு விகாரப் பொருள்கொள்ளாமல் மிகுதிப்பொருளைக்கொண்டு இப்பதம் ஆநந்த மிக்குடைய ஸர்வேசுவரனை யுணர்த்துமென்றுகொள்வதே சாலப் பொருத்தமுடையதாம்.

அஷ்டவிதபக்தி.

ஈசுவரவிஷயமான பக்தி எட்டுவகைப்படுமென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுளது. அவை வருமாறு:— (1) பாகவத பக்தி, (2) ஒருவன்செய்த பகவதாராதனத்தைக்குறித்துச் சந்தோஷித்தல், (3) தானே பகவதாராதனஞ்செய்தல், (4) ஆராதனை செய்வதில் தம்பமற்றிருக்கை, (5) ஈசுவரவிஷயமான கதைகளைக்கேட்பதில் விருப்பம், (6) பகவத்விஷயமான கதையைச் சொல்லும்போதும் கேட்கும்போதும் குரல்தழுதழுத்துக் கண்ணீர்மல்கி உடம்பில் மயிரெழுந்து பரவசமாயிருக்கை, (7) எப்போதும் பகவத் தியானஞ் செய்கை, (8) எம்பெருமானிடத்தில் ஒருபலத்தைக் கோராமல் அநந்யப்ரயோஜனனாயிருக்கை, என்ற எட்டு விதமாம். "மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே தம்பவர்ஜநம், மத்கதாச்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்க விக்ரியா, மமாநுஸ்மரணம் நித்யம் யச்சமாம் நோபஜீவதி, பக்திரஷ்டவிதாஹ்யேஷா" "மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம், ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே தம்பவர்ஜநம், மத்கதாச்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்க விக்ரியா, மமாநுஸ்மரணம்

நித்யம் யச்சமாம் கோபஜீவதி, புக்திரஷ்டவிதாஹ்யேஷா" என்ற சுலோகங்களும் இங்கறியத்தக்கது. இந்த எட்டுவித பக்திகளில் முன்னர்க்கூறிய பாகவத பக்தியும் இறுதியிற்கூறிய அநங்யப்ரயோஜநமாயிருப்பதாகிய பக்தியுமுண்டாதல் அருமையாகும். இவை இரண்டுங் கைகூடப்பெறுமேல் ஏனையவற்றை எளிதிற்பெறலாம்.

அஷ்டாங்கப்ரணாமம்.

"எட்டினோயபேதமோடிறைஞ்சிநின்றவன்பெயர்
எட்டெழுத்துமோதுவார்கள்வல்லர்வானமாளவே"

என்று திருமழிசைப்பிரான் அஷ்டாங்கப்ரணாமத்தால் எம்பெருமானை வணங்கிநின்று திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தை உச்சரிப்பவர்கள் பரமபதத்தையாளும் ஸாமர்த்யமுடையவராவாரென்று அருளிச்செய்தார். இங்குத் திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தை உச்சரிப்பதற்கு அங்கமாக அஷ்டாங்கப்ரணாமத்தைக் குறிப்பித்துள்ளார். அஷ்டாங்கப்ரணாமமாவன:— அபிமானமற்றவனாய் விழுகையும், மனம் புத்தி என்ற இவற்றிற்கு எம்பெருமானை விஷயமாக்குகையும், இரண்டுகாலும், இரண்டுகையும், சிரஸ்ஸும் ஆகிய இவ்வைந்தும் கூர்மம் (ஆமை) போல் பூமியிற்பொருந்துவதாம். "ஜாநுப்யாஞ்ச ஶிரஸா ஸஹ ந்யஸ்யாதலே, கூர்மவத்ஸ்தாப்யதே யஸ்து ப்ரணாமஸ் ஸோऽயமீரித:" "மநோபுத்த்யபிமாநேந ஸஹ ந்யஸ்ய தராதலே, கூர்மவச்சதுர: பாதாந் சிரஸ்தத்ரைவ பஞ்சமம்" என்ற சுலோகம் இதற்குப் பிரமாணமாகக்கொள்க. இஃதன்றி மற்றோர் வகையாகவும் உரைப்பார்கள். அது வருமாறு:— முன்பு கண்களாற் பார்த்து அதன்பின் அவ்வுருவை மனத்தினால் தியானித்துக்கொண்டு அபிமானமற்றவனாய்த் தன் தாஸ்யநாமத்தை வாயினாற் சொல்லி அஞ்சலிசெய்த இரண்டுகைகளும், இரண்டு கணைக்கால்களும் இரண்டு முழந்தாள்களும், மார்பும், சிரஸ்ஸுமாகிய இவ்வைந்து அவயவங்களைத் தரையில் பொருந்தச்செய்வது அஷ்டாங்கப்ரணாமமாகும். இங்கு இரண்டு கை, இரண்டு கால், இரண்டு முழந்தாளென்றுரைக்கப்பட்ட ஆறெண்களை மூன்றெண்களாகக்கொள்க.

"𑌉𑌰𑌸𑌾𑌶𑌿𑌰𑌸𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌵𑌚𑌸𑌾𑌤𑌥𑌾 ।
𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌨𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗 𑌈𑌰𑌿𑌤𑌃 ॥

"உரஸாசிரஸாத்ருஷ்ட்யா மநஸா வசஸாததா
பத்ப்யாம் கராப்யாம் ஜாநுப்யாம் ப்ரணாமோஷ்டாங்க ஈரித:"

என்ற சுலோகமும் இங்கறியத்தக்கது.

ப்ரபந்நன் வர்த்திக்குமுறை.

ப்ரபந்நாதிகாரி வர்த்திக்கவேண்டிய கிரமத்தை எம்பெருமானார் தம் சரமதசையில் தம் சிஷ்யர்களை நோக்கி அருளிச்செய்தார். அதுவருமாறு:— "ப்ரபந்நாதிகாரிகளுக்கு முன்னடிபார்த்து வர்த்திக்க வேண்டுவன மூன்று விஷயமுண்டு. அவையாவன:— அநுகூலரென்றும், ப்ரதிகூலரென்றும், அநுபயரென்றும். அநுகூலராவார்:— ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலராவார்:— பகவத்வேஷிகள்; அநுபயராவார்:— ஸம்ஸாரிகள். இவருள் அநுகூலரைக் கண்டால் சந்தனகுஸுமதாம்பூலாதிகளைக்கண்டாற்போலவும், நிலாத்தென்றல்களைக் கண்டாற்போலவும் அபிமத விஷயத்தைக் கண்டாற்போலவும் உகந்து போரக்கடவன், ப்ரதிகூலரைக் கண்டால் ஸர்ப்பாக்னிகளைக் கண்டாற்போலவும் வெருவிவர்த்திக்கக்கடவன். அநுபயரைக் கண்டால் காஷ்டலோஷ்டாதிகளைக் கண்டாற்போலே த்ரிணீகரித்து வர்த்திக்கக்கடவன். அவர்கள் அநுகூலித்தார்களாகில் ஆத்மஜ்ஞாநத்தை உபதேசிக்கவும், அநுகூலியார்களாகில் ஐயோ! என்று க்ருபைபண்ணிப் போரவும்.

இப்படிச் செய்யவொட்டாதொழிகிறது அர்த்தகாமப்ராவண்யம். அதடியாக ஸ்ரீவைஷ்ணவர்களை அநாதரிக்குமாகில் ஸார்வபௌமனுடைய ராஜபுத்ரனை அவன் ஸந்நிதியிலே பரிபவித்தால், அவன் வெறுக்குமாப்போலே எம்பெருமான் திருவுள்ளம் வெறுக்கும். அர்த்தகாமமடியாக ப்ரதிகூலரை ஆதரிக்குமாகில், ஸார்வபௌமனுடைய ராஜாவின் மஹிஷி, க்ஷுத்ர ஜந்துக்கள் பக்கல் மடிப்பிச்சை புக்கால், ராஜாவுக்கு அவத்யமாகையாலே ராஜா வெறுக்குமாப்

போலே, எம்பெருமான் இவனை வெறுக்கும். அர்த்தகாமமடியாக அநுபயரை ஆத்ரிக்குமாகில், ரத்னத்துக்கும் பலகரைக்கும் வாசி யறியாதாப்போலே, பிறந்த ஜ்ஞாநம் கார்யகரமாவதில்லை யென்று எம்பெருமான் இவனை அநாதரிக்கும்.'' என்பதாம்.

ப. அ.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(172-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ஸூ) யக்ஷ:- 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑌾𑌵𑌪𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌨𑍍𑌨𑌿𑌵𑌪𑌤𑌾𑌂 𑌵𑌰𑌂 ।
𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑌵𑌤𑌾𑌂 𑌵𑌰𑌂 ॥

கிம்ஸ்விதாவபதாம் ச்ரேஷ்டம் கிம்ஸ்விந்நிவபதாம் வரம்
கிம்ஸ்வித் ப்ரதிஷ்டமாநாநாம் கிம்ஸ்வித் ப்ரஸவதாம்வரம்.

(இ-ள்) தேவயஜ்ஞத்தைச் செய்பவர்கட்குச் சிறந்த பயன் யாது? பித்ருயக்ஞத்தைச் செய்பவர்கட்குச் சிறந்த பயன் யாது? நிலைபெற விரும்புகின்றவர்கட்குச் சிறந்தது எது? ஸந்ததியை விரும்புகிறவர்கட்குச் சிறந்தது எது? (எ-ம்.)

தர்:- 𑌵𑌰𑍍𑌷𑌮𑌾𑌵𑌪𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌨𑌿𑌵𑌪𑌤𑌾𑌂 𑌵𑌰𑌂 ।
𑌗𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌸𑌵𑌤𑌾𑌂 𑌵𑌰𑌂 ॥

வர்ஷமாவபதாம் ச்ரேஷ்டம் பீஜம் நிவபதாம் வரம்
காவ: ப்ரதிஷ்டமாநாநாம் புத்ர: ப்ரஸவதாம் வரம்.

(ஸூ) இனி, முற்கூறப்பட்ட சமதம முதலிய ஸாதனங்களில் அசக்தனை ஒருவன் யக்ஞம் முதலியவைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்பதுரைக்கப்படுகிறது.

(இ-ள்.) 21, தேவயக்ஞத்தைச் செய்பவர்கட்குச் சிறந்த பயன் மழையாம். (22) பித்ருயக்ஞத்தைச செய்பவர்கட்குச் சிறந்த பயன் விதையாம். (23) நிலைபெறவிரும்புகிறவர்கட்குச் சிறந்தது பசுவாம். (24) ஸந்ததியைவிரும்புகிறவர்கட்குச்சிறந்தது புதல்வனும்; (எ-ம்.)

(எ) யக்ஷ:- இந்திரியார்த்தாநநுபவந் புத்திமாந் லோகபூஜித:
ஸம்மத: ஸர்வபூதாநாம் உச்வஸந் கோநஜீவதி॥

இந்திரியார்த்தாநநுபவந் புத்திமாந் லோகபூஜித:
ஸம்மத: ஸர்வபூதாநாம் உச்வஸந் கோநஜீவதி.

---

(21) இங்கு 'ஆபவதாம்' என்ற சொற்கு "ஆஸமந்தாத் தேவாந் தர்ப்பயதாம். (தேவயக்ஞம் குர்வதாம்) என்ற வ்யுத்பத்தியினுல் தேவயக்ஞத்தைச் செய்பவர்கட்கு என்று பொருளுரைக்கப்பட்டது. நிலத்தின் வளத்தைப் பெருக்கித் தானந்தவம் முதலிய தர்மங்கள் இனிது நடத்தற்கு மழையின் றியமையாததாயிருப்பதாலும், அதன்மூலமாகத் தேவயக்ஞத்தைச் செய்பவர்கள் முற்கூறிய ச்ரவணதி ஸாதனங்களை எளிதிற்பெறலாமாதலாலும், 'தேவயக்ஞத்தைச் செய்பவர்கட்குச் சிறந்த பயன் மழையாம்' என்று சொல்லப்பட்டது.

(22) 'நிவபதாம்' என்ற சொற்கு "நிவாப: பித்ருதர்ப்பணம்; தத்குர்வதாம் (பித்ருயஜ்ஞம் குர்வதாம்) என்ற வயுத்பத்தியினுல் பித்ருயக்ஞத்தைச் செய்பவர்கட்கு என்று பொருளுரைக்கப்பட்டது. இங்கு விதை யென்றது ஸந்தானத்திற்கு ஏதுவென்றவாறு.

(23) நிலைபெற விரும்புதலாவது:— அழியாப்புகழை நிலைநிறுத்த விரும்புவதாம். அது, விருந்தோம்புதலானும், வேள்வி முதலிய செய்தலானுமுண்டாகும். இவை இனிது நடைபெறுதற்குப் பால் முதலியவற்றைத் தந்துதவுவது பசுவாதலால் 'நிலைபெற விரும்புகின்றவர்கட்குச் சிறந்தது பசுவாம்' என்றுரைக்கப்பட்டது.

(24) தான் எஞ்சியவிடத்தும் (உயிர் நீத்தவிடத்தும்) எஞ்சாதுநின்று பித்ருபூஜை முதலியவற்றைச் செவ்வனேமுடித்து ஸந்ததியையும் நிலைபெறச்செய்து தன்னை நரகடையாமற் காப்பவன் புதல்வனுதலால் 'ஸந்ததியை விரும்புகின்றவர்கட்குச் சிறந்தது புதல்வன்' என்றுரைக்கப்பட்டது.

(எ) இனி, இங்குக் கூறப்பட்ட தேவயக்ஞம் முதலியவற்றைக் கைக்கொள்ளாதவனுக்கு வரும் ஏதம் கூறப்படுகிறது.

(இ-ள்.) புலன்களால் நுகரப்படுவனவற்றை நுகர்ந்தும், அறிவுள்ளவனுயிருந்தும், (தனமுடைமையால்) உலகத்தாரால் பூஜிக்கப்பட்டிருந்தும், (கொடுக்குந்தன்மையால்) எல்லா உயிர்க்கும் இஷ்டனுகவிருந்தும், உயிரோடிருக்கும் எவன் உயிரில்லாதவனுகவிருக்கிறுன்; (எ-று)

தா:- देवतातिथिभृत्यानां पितॄणामात्मनश्च यः।
न निर्वपति पञ्चानामुच्छ्वसन्न स जीवति॥

தேவாதாதிதி ப்ருத்யாநாம் பித்ருணுமாத்ம நச்சய:
. நநிர்வபதி பஞ்சாநாம் உச்வஸங் நஸஜீவதி.

(இ-ள்.) (25) தேவர், விருந்தினர், சுற்றத்தார், பித்ருக்கள், என்ற இவர்களையும், தன்னையும் எவன் திருப்தியடையச் செய்கிறுனில்லையோ அவன்உயிரோடிருந்தும் உயிரில்லாதவனுகிறுன் (எ-று.)

(அ) யக்ஷ:- किंस्विद्गुरुतरं भूमेः किंस्विदुच्चतरं च खात्।
किंस्विच्छीघ्रतरं वायोः किंस्विद्बहुतरं तृणात्॥

கிம்ஸ்வித்குருதரம் பூமே: கிம்ஸ்விதுச்சதரம் சகாத்
கிம்ஸ்வித்சீக்ரதரம் வாயோ: கிம்ஸ்வித்பஹுதரம் த்ருணுத்.

(இ-ள்.) பூமியைக்காட்டிலும் சிறந்தவர் யார்? ஆகாயத்தினுமுயர்ந்தவர் யார்? காற்றினும் வேகமுடையது எது? புற்களினும் பலவாயிருப்பது எது? (எ-ம்.)

---

(25) "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங், கைம்புலத்தாரோம்பல் தலை" என்றபடி பிதரர் முதலானுர்களை ஓம்புதலாகிய இல்வாழ்வானுக்குரிய கடமைகளைச் செய்யாதவன் உயிரோடிருந்தும் உயிரடையும் பயனைச் செய்யாததினுல் உயிரற்றவனுவான். இதனுல் உயிரோடு வாழ்கின்றகாலத்தில் காலத்தை வீணுகக் கழிக்காமல் இக்கடைமைகளைச் செய்யவேண்டுமென்பது கருத்து.

(அ) இனி, இங்கு ஸுலப ஸாதனங்களாகக்கூறப்பட்ட தேவயக்ஞம் முதலியவற்றைச் செய்வதற்கு அசக்தனுன ஒருவன் ஸுலபமாகக் கைக்கொள்ளத்தக்க வேறு சில ஸாதனங்கள் கூறப்படுகின்றன.

தர்ம:- மாதா குருதரா பூமே: காத் பிதோச்சதரஸ் ததா।
மந: ஶீக்ரதரம் வாதாச் சிந்தா பஹுதரீ த்ருணாத்॥

மாதாகுருதரம் பூமே: காத்பிதா உச்சதரஸ் ததா
மந:சீக்ரதரம் வாதாத் சிந்தா பஹுதரீ த்ருணாத்.

(இ-ள்.) (26) பூமியைக்காட்டிலும் சிறந்தவள் தாய். (27) ஆகாயத்தைக்காட்டிலும் உயர்ந்தவன் தந்தை. (28) காற்றினும்

---

(26) தாயானவள் புதல்வனைப் பெறவேண்டி பலகாலம் நோன்பு நோற்றுப் பின் பத்துமாதம் சுமந்திருந்து பிரஸவவேதனை முதலிய பலதுன் பங்களையுமனுபவித்துக் குழந்தையைப் பெறுகிறாள். அதன்மேல் அது அறியாக்குழந்தைப் பருவத்தில் யாதொரு நோயணுகாதபடி காத்து மேன் மேலும் அக்குழந்தைவிர்த்தியடைவதில் கண்ணேக்குடையவளாய் யாதொரு ப்ரதிப்ரயோஜனத்தை விரும்பாமல் பேணி வருகின்றாள். ஆதலால் இவள் செய்த நன்றி அளவிடமுடியாததாயிருக்கும். அதனால் இங்குப் 'பூமியைக் காட்டிலும் தாய் சிறந்தவளென்றுரைக்கப்பட்டது.

(27) தந்தையானவன் தனது புதல்வனை பொன்னே! மணியே! கண்ணே! என்று அன்போடழைத்து ஆதரித்து இன்சொற்பயிற்றிப் பின் நல்லாசிரியன்பால் விடுத்து ஞானக்கலைகளை ஓதுவித்து அறிவுடையவனாக்கி அதனால் அவன் பிறவிப்பிணியாகிய பெருந்துன்பத்தினின்றும் நீங்கி நித்யா நந்த வாழ்வையடையும்படி செய்கிறான். இங்குத் தந்தை மகனைப்பெற்று வளர்த்ததோடு அவனுக்கு ஞான ஸாதனமுமிருப்பதால் இவன் செய்த உபகாரத்தை ஆராயுமிடத்தும் அளவிடவொண்ணாததாயிருக்கும். ஆதலால் 'ஆகாயத்தைக்காட்டிலும் உயர்ந்தவன் தந்தையாவான்' என்றுரைக்கப்பட்டது. இதனால் புதல்வன் தந்தை செய்த உபகாரத்தை ஒருபோதும் மறவாமல் அவனுக்கு ஏற்றபடி பணிவிடைசெய்து வழிபடக் கடவனென்பது பெறப் படும்.

(28) மனம் ஓரிடத்திலும் நிலைபெற்று நில்லாது பற்பல விஷயங் களில் காற்றைக்காட்டிலும் விரைந்துசெல்லும் இயல்பினதாதலால் 'காற்றி னும் வேகமுள்ளதுமனமாம்' என்று கூறப்பட்டது. மேலும் "மந ஏவ மநு ஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:" "மனஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:" என்றபடி பந்த மோக்ஷங்கட்குப் பொதுக்காரண மாகிய மனதை இதரவிஷயங்களிற் செலுத்தி ஸம்ஸார பந்தத்தையடையா மல் மோக்ஷ ஸாதனமாக்கி மோக்ஷத்தைப்பெற வேண்டுமென்பது பெறப் படும்.

வேகமுள்ளது மனமாம். (29) புற்களினும் பலவாயிருப்பது சிந்தையாம்; (எ-று.)

(தொடரும்.)

ஸ்ரீ:

"அருள்கொண்டாடுமடியவர்" வ்யாக்யானம்.

[ஸ்ரீவானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானுயெழுந்தருளியிருந்தவரும், ஸ்ரீ. உ. வே. வித்வான் பக்ஷிராஜையங்கார்ஸ்வாமி குமாரருமான வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(159-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆழ்வார்தம்முடைய ஸித்தாந்தம் இதுவாகில் அவயவபூதரான மற்றையாழ்வார்களும் இதனை அடியொற்றிப் பேசினார்களோவென்னில்; "அவன் தமரெவ்வினையராகிலுமெங்கோன், அவன்தம" ரென்று ஸ்வஸித்தாந்தத்தை முகாந்தரத்தாலேயும் "எமக்காவா

---

(29) வாழ்வின் தன்மையறியாமல் சிந்தை பலகோடி விஷயங்களை எண்ணித் துச்சத்தன்மையுடையதாயிருக்குமாதலால் 'புற்களினும் பலவாயிருப்பது சிந்தையாம்' என்றுரைக்கப்பட்டது. துரும்பு துச்சத்தன்மையுடையதாயும் பலவாயுமிருக்கும். சிந்தை அதனினும் துச்சத்தன்மையுடையதாயும், கணக்கிலடங்காத பலவிஷயங்களை எண்ணுவதாயுமிருக்கும். "ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப, கோடியுமல்ல பல" என்பதும் இங்கறியத்தக்கது. இதுநிற்க; இங்ஙனம் வீணாகப் பலவிஷயங்களைக் கருதிச்செல்கின்ற சிந்தையையடக்கி ஜ்ஞானமுடையவராக இருக்கவேண்டுமென்பது கருத்து.

இதனால், தாய்தந்தையரின் பணிவிடை, மனவடக்கம், சிந்தை ஒழிவு என்ற இவைகள், முற்கூறப்பட்ட வேள்வி செய்வதில் அசக்தனாயுள்ள முமுக்ஷுவானவன் சுலபமாகக் கையாளத்தக்க சாதனங்களாமென்பது பெறப்படும்.

ரொருவரே எம்பெருமான், தமக்காவான் தானே மற்றல்லால்" என்று ஸ்வமுகத்தாலேயும் பேசினர் பொய்கையாழ்வார். "சரந் துரந்தான்-தாளிரண்டும், ஆர்தொழுவார் பாதமவைதொழுவ தன்றே" என்றார் பூதத்தாழ்வார். "தேனமரும் பூமேல் திரு நமக்கென்றுஞ் சார்வு" என்றார் பேயாழ்வார். "கோளரியை, வேறுக-ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச், சாத்தியிருப் பார் தவம்" என்றும் "பழுதாகாதென்றறிந்தேன்" என்றும் வெளி யிட்டார் திருமழிசைப்பிரான். "நாவகாரியம்" என்ற திருமொழி யில் முதல் ஐந்துபாட்டுக்களால் அபாகவதர்களை நிந்தித்தும், மேலைந்து பாட்டுக்களால் "பூதமைந்தோடு" என்று தொடங்கி, "கேசவா புருடோத்தமா கிளர்சோதியாய் குறளாவென்று, பேசு வாரடியார்களெந்தம்மை விற்கவும் பெறுவார்களே" என்பது ஈறு கப்பேசி, "கோவிந்தன் தன்னடியார்களாகி, எண்டிசைக்கும் விளக் காகி நிற்பார் இணையடியென் தலைமேலவே" என்றும் பாகவதர்களைக் கொண்டாடி நின்றார் பெரியாழ்வார். "தேட்டரும்" என்ற திரு மொழியில் வெளியிட்டார் குலசேகரப்பெருமாள். "மேம்பொருள்" என்ற பாட்டிற்கு மேற்பாட்டுக்களாலும் "அளியனென்றருளி யுன்னடியார்க்காட்படுத்தாய்" என்றும் வெளியிட்டார் தொண்ட ரடிப்பொடிகள். "அடியார்க் கென்னையாட்படுத்த விமலன்" என் றுரைத்தார் திருப்பாணர். "நண்ணாத வாளவுணர்" "கண்சோர வெங்குருதி" என்ற திருமொழிகளால் ததீய ப்ரபாவத்தை வெளி யிட்டும், "எண்ணாதமானிடத்தை எண்ணாதபோதெல்லாமினிய வாறே" என்றும், "மானிடவரல்லரென்றென்மனத்து வைத்தேனே" என்றும் ததீயரல்லாதாரை இகழ்ந்து பேசினரிறே திருமங்கை மன்னனும்,

ஆழ்வார் சரமபர்வமே புருஷார்த்தமானல் அத்தைய்ய கவி பாடாமல் பின்னை ப்ரதம பர்வத்தையே பரக்கக் கவிபாடுவானென் னென்னில்; "ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய:" "ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய:" என்று ஸ்தவப்ரியனை ஸர்வேசுவரன் தன்னைக் கவிபாடக் கருதித் தானே தன்னைக் கவிபாடினால் 'ஆத்மஸ்துதிபரனானொருவன் தன்னைக் கொண்டாடினன்' என்று சிஷ்டர்கள் அநாதரிப்பார்களென்று பார்

த்து; சேனை முதலியாரை ஆழ்வாராக அவதரிப்பித்து 'மயர்வறமதி நலமருளி' க்கவிபாடுவித்துக் கொண்டான் என்பர் சிலர். சிலர் எம்பெருமானே ஆழ்வாராக அவதரித்தான் என்பர்கள்.

அன்றிக்கே இவருடைய திவ்யஸூக்திகளுக்குச் சேரச் சொல்லுகிறபடி ஒன்றுண்டு. அஃதாவது:— நித்யஸம்ஸாரியான இவரைத் திருத்தி இவரைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ள வேணுமென்று நினைத்து இவரைத் திருத்தப்பார்த்தவிடத்தில், இவரும் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிற்றுக் கெட்டாதவராய் மாறி மாறிப் பலபிறப்பும் பிறக்க அவனும் இவர் புக்கவிட மெங்கும்புக்கு "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந" பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவசார்ஜுந" என்று அநேக அவதாரங்களைப் பண்ணியதில் இந்த சரமஜந்மத்திலே "எதிர் சூழல்புக்கு எனைத்தோர் பிறப்பு மெனக்கே யருள்கள் செய்ய, விதிசூழ்ந்தது..." என்று இவர் தம் திருவாயாலே சொல்லும்படி ஈசுவரன் பண்ணின பாக்யத்தாலோ ஆழ்வார் பாக்கியத்தாலோ அல்லது அஸ்மத்பாக்யத்தாலோ ஸத்ய ஸங்கல்பனுடைய ஸங்கல்பமே ஸத்யமாய்ப் பலித்து, அமலங்களாக விழிக்கும் நெடுநோக்கிற்கு இலக்கானார்.

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபதரிசனார்த்தமாக "திவ்யம் ததாமி தே சக்ஷு:" "திவ்யம் ததாமி தேசக்ஷு:" என்று திவ்யசக்ஷுஸைக் கொடுத்தாற்போலவும், "மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந்" "மச்சந்தா தேவதேப்ரஹ்மந்" பிர்ம்மா வால்மீகிக்குத் தர்மவீர்யஜ்ஞானத்தைக் கொடுத்தாற்போலவும், ஈசுவரன் "மயர்வறமதிநலமருளினன்" என்று பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைக்கொடுத்துத் தீமனங்கெடுத்து மருவித்தொழும் மனமையுமளித்து "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" "போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" "ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்" ... "ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்ம மேதத் ப்ரதார்த்

மாரம் ப்ரேரிதாரஞ்ச மத்வா ஜுஷ்டஸ்ததே நாம்ருதத்வமேதி” என்று தத்வத்திரயங்களைக் காட்டுமிடத்தில் அசித்தம்சம் த்யாஜ்ய மென்றும், சித்தான ஆத்மா உபாதேயம் என்றும் அறியும்படி அலகலகாய்த் தெளிவுபடுத்திக் காட்டியும், “ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்த்யுபாயம் ப²லம் ப்ராப்தேஸ் ததா² ப்ராப்தி விரோதி⁴ ச, வத³ந்தி ஸகலா வேதா³ஸ் ஸேதிஹாஸபுராணகா:, முநயஶ்ச மஹாத்மாநோ வேத³ வேதா³ந்த பாரகா:” “ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:, ப்ராத்யுபாயம் பலம் •ப்ராப்தேஸ் ததா ப்ராப்தி விரோதிச, வதந்திஸகலாவேதாஸ்ஸேதிஹாஸபுராணகா:, முநயச்ச மஹாத்மானோ வேத வேதாந்த பாரகா:” என்று சொல்லப்படுகிற அர்த்த பஞ்சக ஸ்வரூபத்தையும், பகவத் ஸ்வரூபரூபகுண சேஷ்டிதங்களையும், அதீதாநாகத பகவதவதாராபதாநாதிகளையும் தனித் தனியே பிரித்துக்காட்டியுங்கொடுத்து இவரையிட்டுக் கவிபாடுவித்துக்கொண்டான்.

இவரும் ‘திருமாலாலருளப்பட்ட சடகோபன்’ என்கிறபடியே அவனருளால் ஐஹிகாமுஷ்மிகங்களான ஸகலதத்வங்களையு மறிந்து, அதில் அசித்தான மூலப்ரக்ருதியையும் அதன் கார்யங்களான மஹதஹங்காராதிகளையும் “அஜாமேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம் ப³ஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம்॥ அஜா மேகாம் லோஹித சுக்ல க்ருஷ்ணும் பஹ்வீம் ப்ரஜாம்ஜநயந்தீம் ஸரூபாம். என்று அத்யந்த ஹேயமாயும் ஸம்ஸார வர்த்தகமாயும் பகவத் ப்ராப்தி ப்ரதிபந்தக மாகவுமறிந்து, அத்தை யொழித்துத் தரவேணு மென்று முதல்தன்னில், “பொய்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை யினியாமுறாமை” என்று தொடங்கி முடிவில், “ஞானப்பிரானை யல்லாவில்லை நான் கண்ட நல்லதுவே” என்று பகவத்பரத்வத்தையே ஸித்தாந்தமாக்கி “அழுந்தார் பிறப்பாம், பொல்லாவருவினை மாயவன் சேற்றள்ளற் பொய்ந்நிலத்தே” என்று இது கற்றார்க்கும் ப்ரக்ருதிவிமோக்ஷத்தையே பலமாகச் சொல்லித் தலைக்கட்டினார் திருவிருத்தத்தில்.

ஈசுவரனும் இத்தைக் கேட்டு, 'வாரீர் ஆழ்வீர்! நீர் இங்ஙன் பதறுவானென்? நாம் உம்மையிட்டு ஜகத்தைத் திருத்தப்பார்த்தோமே; "ஸதாபஸ்யந்தி ஸூரய:" ஸதாபஸ்யந்தி ஸூரய: என்று தேசவிசேஷத்திற்போய் அநுபவிக்கும் அநுபவத்தை இங்கே காட்டித் தருகிறோம்:' என்று தன்னுடைய திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யாதிகளைக் காட்டிக்கொடுத்தும் அத்தை யநுபவிக்கைக்கீடான தசாவைசத்யத்தையும் பிறப்பித்துக் கொடுக்க, "செக்கர் வான் முகிலுடுத்து" என்று தொடங்கி அத்தை அநுபவித்து, இதற்குப் புறம்பான ஸம்ஸாரிகள் படியைக்கண்டு "ஓஓ உலகினதியல்பே, ஈன்றோளிருக்கமணை நீ" ராட்டுவதே! என்று வெறுத்து, "ஓராவிலைச் சேர்ந்த வெம்,பெருமா மாயனையல்லது, ஒருமாதெய்வமற்றுடையமோ யாமே" என்று ஸ்வபக்ஷத்தைச் சொல்லிமுடித்தார் திருவாசிரியத்தில்.

இப்படி, தாம் இரண்டுபிரபந்தஞ் செய்தருளியும் "வொயஹ: வரஸ்பரம்" போதயந்த: பரஸ்பரம் என்று தமக்கு உசாத்துணையாக யாருந்திருந்தாதபடி கண்டு "நெஞ்சேயியற்றுவா யெம்மொடு நீ கூடி" என்று நெஞ்சைத் துணையாகக்கொண்டு கவி பாடி "ஆரானுமாதானுஞ்செய்ய அகலிடத்தை யாராய்ந் ததுதிருத்தலாவதே" யானுமென்னெஞ்சும் இசைந்தொழிந்தோமென்று வெறுத்து "சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே ஓவாதவுணுக்கண்" என்று ஆசையை வளர்த்து, நெஞ்சே! "எப்போதும் கைகழலாநேமியான் நம்மேல்வினை கடிவான், மொய்கழலே யேத்தமுயல்" என்று 'எப்போதும் எம்பெருமான் திருவடிகளை மறவாதே கொள்' என்று தம் திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்து தலைக்கட்டினார் திருவந்தாதியில்.

(தொடரும்.)

ஸ்ரீ:

உபாயமும் ப்ரபத்தியே.

இது, எம்பெருமானாரைக் குறித்துத் திருக்கச்சி நம்பிமுகமாக வெளியிட்ட முக்ய சாஸ்த்ரார்த்தங்களடங்கியுள்ள பேரருளாளப் பெருமாள் அருளிய ஆறுவார்த்தைகளுள் ஒன்றும். இவ்வார்த்தையை எல்லாப்ரமாணங்களையும்விடமுக்யப்ரமாணமாக நம்மவர்கள் கொள்வது கடமையாகும். அங்ஙனமிருக்க நம்ஸித்தாந்தத்தில் ஈசுவரனையே உபாயமாகக்கூறுமாறெங்ஙனம்? என்று சிலர் எதிர்வாதம் செய்யக்கூடும், அது விஷயம் இங்கு நிவர்த்திக்கலாகும்.

மேலும் ஸர்வேசுவரன் கிருஷ்ணவதாரத்தில் கீதாசரமசுலோகத்தால் தனக்கே உபாயத்வமுள்ளதென்றும், அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் பேரருளாளப்பெருமாள் ப்ரபத்திக்கே உபாயத்வமுள்ளதென்றும் ஸாதித்துள்ளார்கள். இந்த இரண்டு வாக்யங்களுக்கு ஒன்றிற்கொன்று விரோதம் வருகிறபடியால் அது விஷயமும் ஆராய்ந்து சமாதானமுரைக்கப் பெறும். அது வருமாறு:—

ஒருவன் எதை விரும்பினும் அதையடைய சிலர் தெய்வத்தையும், சிலர் கருமத்தையும், சிலர் ஸ்வபாவத்தையும் காரணமாகச் சொல்லுகிறார்கள். இம்மூன்றும் பலனைக் கொடுப்பதில் ஒற்றுமையுடையதாகவே யிருக்கும். இவை, ஒன்றை யொன்றுவிட்டு எவ்வகையானும் பிரிகிறதில்லை. இவைகளில் ஒன்றைக் காரணமாகச் சொன்னாலும் மற்றவைகளையுங் காரணமாகச் சொன்னதாக ஏற்படும். இதற்கு ப்ரமாணமாகப் பாரதம் மோக்ஷதர்மம் 388-ம் அத்தியாயத்தில் 88-வது சுலோகமுதல் 90வது சுலோகம்வரையில் சொல்லப்பட்டுளது. அவை:—

𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌕𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌜𑌨𑌾𑌃 |
𑌦𑍈𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌰𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌭𑍂𑌤𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ||
𑌪𑍌𑌰𑍁𑌷𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌦𑍈𑌵𑌞𑍍𑌚 𑌫𑌲𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 |
𑌤𑍍𑌰𑌯𑌮𑍇𑌤𑌤𑍍 𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑍂𑌤𑌾 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌃 𑌤𑍁 𑌕𑍇𑌚𑌨 ||
𑌏𑌵𑌮𑍇𑌤𑌚𑍍𑌚 𑌦𑍈𑌵𑌞𑍍𑌚 [illegible] |

கேசித் புருஷகாரந்து ப்ராஹு: கர்மவிதோஜநா:
தைவமித்யபரே விப்ரா: ஸ்வபாவம் பூதசிந்தகா:
பௌருஷம் கர்மதைவஞ்ச பலவ்ருத்தி ஸ்வபாவத:
ஆயஏதே ப்ரதக்பூதா அவிவேக: கதஞ்சந
ஏவமேதச்ச தைவஞ்ச யத்பூதம் ஸ்ருஜதேஜகத்:

என்பவைகளாம். இதுநிற்க; "முயற்சியும் தெய்வமும் இயற்கையைச் சார்ந்தது" என்று பழமொழியும் சொல்வதுண்டு. ஒன்றுக்கே உபாயத்வம் கிடையாதென்பதைக் குறித்துக் கீதையில் 18-வது அத்யாயத்தில் 13, 14-ம் சுலோகங்களாலும் சொல்லப்பட்டுளது. அவை:—

𑌪𑌂𑌚𑍈𑌤𑌾𑌨𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮𑍇 ।
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 ॥
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌕𑌰𑌣𑌞𑍍𑌚 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌂 ।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌕𑍍𑌚𑍇𑌷𑍍𑌟𑌾 𑌦𑍈𑌵𑌂 𑌚𑍈𑌵𑌾𑌤𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 ॥

பஞ்சைதாநி மஹாபாஹோ காரணாநி நிபோதமே
ஸாங்க்யேக்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணாம்
அதிஷ்டாநம் ததாகர்த்தா கரணஞ்ச ப்ருதக்விதம்
விவிதாச்ச ப்ருதக்சேஷ்டாதைவம் சைவாத்ரபஞ்சமம்.

என்பனவாம். பலன்களையடைய முன் சொன்ன மூன்றும் காரணமாகவிருக்கையில் இதில் ஒன்றான ஈசுவரனை அடைவதைக் குறித்து இம்மூன்றுங் காரணமாகத் தட்டில்லை. இம்மூன்றிலும் ஈசுவரன் விசேஷ சைதந்யமுள்ளவனுகையாலும், அங்கியாதலாலும் அவனுக்கே உபாயத்வம் கூறுவது முறையாகும். இம்மூன்றும் ஒன்றை ஒன்று பிரியாதிருக்குமாதலால் அங்காங்கிகளாகச் சொல்லப்பட்டன. இது விஷயத்தில் சில இங்கு உதாகரிக்கப்படும்.

ஒருவனை ஒருவன் அடைந்தால், அவன் அடைந்தது, அந்தர்யாமியான ஈசுவரனையா? ஜீவனையா? சரீரத்தையா? என்று விசாரிக்குமளவில் விசிஷ்டாத்வைதக் கொள்கைப்படி மூன்றில் ஒன்றையடைந்ததாக விவகரித்தாலும் மூன்றையும் அடைந்ததாகவே ஏற்படும். அதுபோல முயற்சி, தெய்வம், ஸ்வபாவம் இம்மூன்றில்

எதை உபாயமாக வடைந்தாலும் மற்றவற்றையும் உபாயமாக அடைந்ததாக ஏற்படும். ஆனால் "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" என்று சரமசுலோகத்தில் தன்னையே உபாயமாகப்பற்றவேணும் என்று சொல்வதின் காரணம் யாதெனின்; தான் முக்யனாதலால் அவனையே உபாயமாகப் பற்றினால் பலம் சீக்கிரம் கிடைக்குமென்பது கருத்து. இந்த உபாயம் சீக்கிரம் பலனைக் கொடுப்பதால் ரஹஸ்யத்திலும் ரஹஸ்யமாகச் சொல்லப்பட்டது.

கீதையில் கர்மஜ்ஞானபக்திப்ரபத்திகளை வியாஜோபாயங்களாகச் சொல்லவில்லை. அதனால் தான் பேரருளாளப்பெருமாளும் 'உபாயமும் ப்ரபத்தியே' என்று அருளிச்செய்தார். இவ்வார்த்தைக்கு ப்ரபத்தியும் உபாயந்தான் என்று பொருள் கொள்ளத்தக்கது. இப்படிப் பொருள் கொள்ளில் முயற்சியாகிய ப்ரபத்திக்கும், ஈசுவரனாகிய தெய்வத்துக்கும் உபாயத்வம் ஸித்தம்; என்று தோற்றும். நம் முன்னோர்கள் ப்ரபத்தியை உபாயமாகவும், ஈசுவரனை உத்தமோபாயமாகவும் அநுஷ்டித்துள்ளார்கள். ஆனால் நம் ஸித்தாந்தப்படி புருஷமுயற்சி ரூபமான ப்ரபத்திக்கு உபாயத்வங்கிடையாது; ஆழ்வாராதியர் ப்ரபத்தியை அநுஷ்டித்தது ஜ்ஞானப் பைத்தியத்தாலாகும் என்று சொல்லுகிறார்கள். இதனால் ப்ரபத்திக்கு உபாயத்வமில்லை என்பது நம்மவர்களுக்கு நோக்கமில்லை. ஈசுவரனுக்கே விசேஷோபாயத்வமுள்ளதென்பதை ஸ்தாபிக்கவே அதிசயோக்தியாக இவ்விதஞ் சொல்லப்பட்டுளது. கீதையில் ஈசுவரனை உத்தமோபாயமாகச் சொல்லியிருந்தாலும் ப்ரபத்திக்கு உபாயத்வமில்லையென்றாவது ப்ரபத்தி கார்யகாமாகாதென்றாவது சொல்லாததினால் இதை அநுஸரித்தே பூர்வாசார்யர்களின் கருத்திருக்குமென்று ஊகித்து அவர்கள் வாக்யத்திற்குப் பொருள் கொள்ளத்தக்கது. ஆகையால் பேரருளாளர் வாக்யத்திற்கும், கீதாசரமசுலோகத்துக்கும், நம் ஸித்தாந்தத்திற்கும் பரஸ்பரம் விரோதமில்லை என்றறியத்தக்கது.

வே. இராமானுஜையங்கார்,
சேரன்குளம்.